www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 032

30 ஓகஸ்ட் 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# "நானே ஏகோபித்த தலைவன். நானே எல்லா முடிவுகளையும் எடுப்பேன்!" காகிதப்புலி இராமு.சுபன் பிரகடனம்

காகிதப்புலிகளின் தலைவராக விளங்கும் இராமு.சுபன், தானே ஏகோபித்த தலைவன் என்றும், சகல முடிவுகளையும் தானே எடுப்பதாகவும் அறிவித்துள்ளார்.

சிங்கள அரசின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இயங்கி வரும் கே.பி கும்பலை சேர்ந்த காகிதப்புலி இராமு.சுபன், வி(நாய்)யகம், நரிகேசி உருத்திரகுமாரன், சர்வே, மனோ போன்றோரின் தொலைபேசி உரையாடல்கள் தற்பொழுது கறுப்பின் ஊடகப் புலனாய்வாளர்களால் ஒட்டுக் கேட்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே காகிதப்புலித் தொழிலதிபர் தனம், டொக்டர் இந்து, சிங்கள உளவாளி சிவரஞ்சன், நரிகேசி உருத்திரகுமாரன் ஆகியோரின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்டு எமது ஆசிரியர் பீடத்திடம் கையளித்து அவர்களை உலகத் தமிழ் உறவுகளிடம் அம்பலப்படுத்திய எமது ஊடகப் புலனாய்வாளர்கள், தற்பொழுது இராமு.சுபனின் தலைமையிலான காகிதப்புலிகளின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்டு வருகின்றனர்.

எமது ஊடகப் புலனாய்வாளர்கள் வழங்கிய தகவல்களின் படி, காகிதப்புலிகளின் தலைவர் இராமு.சுபனுடன் இலண்டனில் உள்ள தனமும், அவரது தண்டாயுதபாணிகளான மேலும் இரண்டு சகபாடிகளும், நோர்வே, பிரான்ஸ், கனடா, யேர்மனி, சுவிஸ் போன்ற நாடுகளில் உள்ள சிலரும் தொடர்புகளைப் பேணி வருவது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரின் தொலைபேசி உரையாடல்களும் எமது ஊடகப் புலனாய்வாளர்களால் தற்பொழுது ஒட்டுக் கேட்கப்பட்டு வருவதோடு, அவற்றின் ஒலிவடிவங்களையும் உலகத் தமிழ் உறவுகளிடம் வெளியிடுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இந்த வகையில் தன்னைத் தானே ஏகோபித்த தலைவனாகப் பிரகடனம் செய்து காகிதப்புலிகளின் தலைவரான சுகி அல்லது சுதிர் என்றழைக்கப்படும் இராமு.சுபன் நிகழ்த்திய தொலைபேசி உரையாடலின் ஒலிவடித்தை இத்துடன் இணைத்துள்ளோம்.

இதில் செயற்குழு என்றும், தலைமைச் செயலகம் என்றும் தானும், தனது சகபாடிகளுமே தமக்குத் தாமே பெயர்சூட்டி இயங்கி வருவதாகப் பீற்றிக் கொள்ளும் காகிதப்புலித் தலைவர் இராமு.சுபன், தானே சகல முடிவுகளையும் எடுப்பதாகவும் தெரிவிக்கின்றார்.

மலேசியாவில் தங்கியுள்ள இவரது தொலைபேசி உரையாடல்கள் எமது ஊடகப் புலனாய்வாளர்களால் தொடர்ந்தும் ஒட்டுக் கேட்கப்பட்டு வருவதோடு, இதேபோன்ற இவரது மேலும் பல உரையாடல்களை அவ்வப்போது உலகத் தமிழ் உறவுகளுடன் பரிமாறுவதற்கு நாம் முடிவு செய்துள்ளோம்.

இதேபோன்று தொழிலதிபர் தனம் போன்றோரினதும், அவரது சகபாடிகள் இருவரினதும் தொலைபேசி உரையாடல்கள், அடுத்து வரும் நாட்களில் எமது ஊடகப் புலனாய்வாளர்களால் ஒட்டுக்கேட்கப்பட்டு, விரைவில் மக்களிடம் பரிமாறப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

# ஊடகப் புலனாய்வில் ஈடுபடுவதற்கு அரிய சந்தர்ப்பம்

சிங்கள அரசின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இயங்கி வரும் காகிதப்புலிகளை நாம் அம்பலப்படுத்தி வரும் நிலையில், எம்முடன் இணைந்து செயற்பட விரும்பும் ஊடகப் புலனாய்வாளர்களை அரவணைத்துக் கொள்வதற்கு கறுப்பின் ஆசிரியர் பீடம் தயாராக உள்ளது.

இந்த வகையில் சிங்கள அரசின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஈடுபடும் கே.பி குழுவைச் சேர்ந்த காகிதப்புலிகள் எவரையாவது உங்களுக்குத் தெரிந்திருந்தால், அவர்களுடன் உரையாடி அவர்களின் தொலைபேசி உரையாடல்களை ஒலிவடிவில் எமக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

உங்களின் பெயர் விபரம் போன்றவை எம்மால் மிகவும் இரகசியமாக பேணிப் பாதுகாக்கப்படுவதோடு, நீங்கள் விரும்பினாலேயொழிய எந்தவொரு சந்தர்ப்பதிலும் உங்களின் விபரங்களை நாம் வெளிக்கொணர மாட்டோம் என உறுதிகூறுகின்றோம்.

இந்த வகையில் கே.பி கும்பலை சேர்ந்த காகிதப்புலிகளில் எவரது நிழற்படங்கள் உங்களிடம் இருந்தால் அவற்றை எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். இவர்களின் பின்னணி தொடர்பான தகவல்களையும் நீங்கள் எமக்கு அனுப்பி வைக்கலாம். அவை மக்களிடம் வெளிக்கொணரப்படும்.

**"கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு"**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நியூசிலாந்து நீதிமன்றின் துணிச்சலான தீர்ப்பு: புலிகள் ஒரு அரசியல் அமைப்பு



சமீபத்தில் நியூசிலாந்தில் அரசியல் தஞ்சம்கோரி நிராகரிக்கப்பட்ட மூவரில் இருவர் நாடு கடத்தப்பட்டனர். இருப்பினும் அதில் ஒருவர் அரசின் முடிவை எதிர்த்து மேல்முறையீடு செய்தார். அதனை விசாரித்த நீதிமன்றம், துணிச்சலான தீர்ப்பை வழங்கியுள்ளது. அகதி அந்தஸ்து கோரிய நபர், புலிகளின் ஆயுதக் கப்பலை செலுத்திய மாலுமி என்றும், அவரே அதை ஒத்துக்கொள்வதாகவும் அரசு தாக்கல் செய்த வழக்கில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை விசாரித்த நீதிபதி இலங்கை அரசு இன அழிப்பில் ஈடுபடும் பட்சத்தில் தமிழர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை படைத்தவர்கள் என்று கூறியுள்ளார்.

இறைமை உள்ள இனம் என்ற அடிப்படையில் அவர்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ள முடியும் என்றும், அதற்காகவே விடுதலைப் புலிகள் போராடியதாகவும் அவர் அதிரடியாகத் தெரிவித்துள்ளார். அத்தோடு, நின்று விடாது புலிகள் ஒரு போராட்ட அமைப்பு என்றும் அது அரசியல் ரீதியாக தற்போது இயங்கிவருவதாகவும் கூறியுள்ளார். அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட அந்த தமிழருக்கு நியூசிலாந்து அரசு உடனே அகதிகள் அந்தஸ்து வழங்கவேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

அவுஸ்திரேலியா புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமாக பட்டியலிட்ட போதும், நியூசிலாந்து அதற்கான முஸ்தீபில் இறங்கியவேளை நியூசிலாந்து தமிழர்களால் எடுக்கப்பட்ட பாரிய போராட்டங்களால் அவை நிறைவேற்றப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இலட்சக் கணக்கில் தமிழர்கள் வாழும் நாடுகளில் புலிகள் இயக்கம் தடை பெய்யப்பட்டுள்ளதும், பல அமைப்புகள் இது குறித்து மௌனம் காப்பதும் கவலைக்குரிய விடயம்.

தற்போது நியூசிலாந்தில் வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பை முன் உதாரணமாகக் கொண்டு, புலிகள் இயக்கத்தை தடைசெய்துள்ள நாடுகளில் அத் தடையை நீக்க தமிழ் அமைப்புகள் ஆவன செய்யவேண்டும். தமிழர் போராட்டத்தில் விடுதலைப் புலிகள் இல்லாத போராட்டம் கிடையாது, அவர்களைப் புறம் தள்ளி தேசிய கொடியை ஏந்திச் செல்ல, அரசு அனுமதித்தாலும், அதனை போராட்ட இடங்களுக்கு கொண்டுவரவேண்டாம் எனச் சிலர் கூறிவருவது முதலில் நிறுத்தப்படவேண்டும்.

இலங்கை அரசின் வெற்றிக்குப் பின்னால் இருப்பது, அவர்கள் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத அமைப்பாகச் சித்தரித்து பல உலக நாடுகளில் அதனை தடைசெய்ததே ஆகும். நாம் முதலில் அத் தடையை உடைத்தெறிந்தால், அது தான் நாம் சிங்களவனுக்கு கொடுக்கும் முதலடியாக இருக்கும். பின்னர் அரசியல் நகர்வுகள் தாமாகவே நகரும். இருப்பினும் தம்மைத் தலைவர்கள் என்று கூறிக்கொள்ளும் சில புலம்பெயர் தற்குறிகள் தொடர்ச்சியாக விடுதலைப் புலிகளின் கொடியை ஏந்திவரவேண்டாம் எனக் கூறிவருகின்றனர். எந்த ஒரு அமைப்பும் அதனை முன் நிலைப் படுத்த தயார் இல்லாதபோது, மக்கள் இதனை அவர்களுக்கு விளங்கப் படுத்துவது நல்லது. புலிகள் இல்லாத தமிழீழப் போராட்டம் என்றுமே நிறைவடையாது, அதுபோல புலிகள் வேறு தமிழர்கள் வேறு என்று அன்னியப்படுத்தும் முயற்சிகளை நாம் உடனே முறியடிக்கவேண்டும்.

நியூசிலாந்தில் உள்ள ஒரு வேற்றின நீதிபதிக்கு புரிந்துள்ள விடயம் தமிழ் தலைவர்களுக்கு ஏன் இன்னும் புரியவில்லை என்பதே ஆச்சரியம், இல்லை புரிந்தும் புரியாதவர்கள் போல நடிக்கிறார்களா என்ற சந்தேகமும் உருவாகிறது. புரியவில்லை என்றால் இனிவரும் காலங்களில் மக்கள் அதனை மிக நன்றாக விளக்குவார்கள்....

நன்றி: அதிர்வு.கொம்

கறுப்பு தேசத்தைக் காக்கும் கரும்படை

இணையத்தில் கறுப்பு
http://thesapuyal.wordpress.com/

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்